RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20420

OPEN ACCESS

# இரட்டைக்காப்பியங்களில் தொன்மங்களின் பங்களிப்பு

**ச.கோகுல் கிருஷ்ணன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தமிழ்நாடு இந்தியா

# The Contribution of Traditions in Twin Epics

**S. Gokul Krishnan [a, *]**

[a] Department of Tamil, Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India

* Corresponding Author: gokulkrishnan@buc.edu.in

Received : 09-06-2020
Accepted : 05-09-2020

Check for updates

**ABSTRACT**

In Tamil, the word 'kathai' (Story) has been used in many contexts. It is used in meanings such as epic history, Itihasa and Puranas, great stories, false words, marvelous stories, fables, speech, type, and conversation. The meaning of 'kathai' is to narrate. Poets select various stories in literary works both for the enjoyment of poetry and to maintain the flow of the story. Those stories serve as the main or supporting elements in literature. Epics contain a great influence of stories. Those stories are referred to as subsidiary stories. Many ancient stories have been presented as subsidiary stories. Ancient stories are included in epics not only as subsidiary stories but also in various forms such as similes, allegories, and descriptions. Ancient stories have been used to maintain the story's flow and to introduce characters. This study aims to illustrate that.

**Keywords:** Twin Epics, Story, Literary works, Kathai

## முன்னுரை

சிலப்பதிகாரம் தொன்மக் கதையினை அடிப்படையாகக் கொண்டது. மணிமேகலைக் காப்பியம் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக அமைந்த காப்பியமாகும். ஆகையால் இவை இரட்டைக்காப்பியங்கள் என்றும் வழங்கப்பெறுகின்றன.

இரட்டைக்காப்பியங்களில் சமண, பௌத்த, வைதீக (சைவம், வைணவம்) சமயங்கள் தொடர்பான தொன்மங்கள் பல இலக்கிய உத்தியாகவும், காப்பியக் கதைக்கான உத்தியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிலம்பில் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய காதைகளில் முறையே கொற்றவை, திருமால், முருகன் முதலிய தெய்வங்கள் புகழப்படுகின்றன. அப்புகழ்ப் பாடல்களில் அத்தெய்வங்கள் தொடர்பான தொன்மங்களும் பிற தெய்வங்கள் தொடர்பான தொன்மங்களும் பயன்படுத்தப் படுகின்றன. தெய்வங்களின் கருணை, ஆற்றல், புகழ் முதலியவற்றை அத் தொன்மங்கள் வழி அறியலாம். சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியங்களில் எந்தெந்த நிலைகளில் காரணங்களில் தொன்மங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் காப்பிய கதை ஓட்டத்திற்கு இத்தொன்மங்களின் பங்களிப்பை ஆராய்வது இக்கட்டுரை.

## காப்பியங்களில் தொன்மங்கள்

காப்பியத் தலைவர்களின் புகழ், சிறப்பு, திறமை, முதலானவைகள் அதில் இடம் பெறும் கடவுளர்களால் சிறப்பிழந்துவிடக் கூடாது, கடவுளரின் ஈடுபாடு என்பது அங்கு இடம் பெறும் மனிதப் பாத்திரத்தைச் சிறப்பிக்கவே. மாறாக, மனி பாத்திரத்தினும் மேம்பாடுடையதாகக் கடவுளர் படைப்பு அமைந்து விடக் கூடாது. கடவுளர்கள்

மனிதர்களோடு மனிதராக, அவர்கள் அங்கமாகத் திகழ வேண்டும்.கடவுள் மனிதர்களுக்கு அறிவு பகர்வராக, வழிகாட்டுபவராக அமைய வேண்டுமே தவிரத் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்துபவராக அமைதல் கூடாது. காப்பிய வளர்ச்சிக்கும், உயர்விற்கும் கடவுளரின் பங்களிப்பு முக்கியமானது. தெய்வீகத் தன்மை என்பது காப்பியத்தின் முக்கிய கூறாகும். இயற்கை இகந்த ஆற்றல் இன்றி எந்த ஒரு காப்பியப் படைப்பும் அமைதல் இல்லை.காப்பியத்தின் வெற்றிக்குக் காரண அதில் புதைந்து கிடக்கும் இயற்கை இகந்த ஆற்றலே. இதற்காகப் பயன்படுத்தப்படுபவர்களே கடவுளரும் கடவுள் தன்மை வாய் தேவர்களும். அது ஒரு மரபின் தொடர்ச்சி. காப்பியத்திற்கு அது அணிகலன் என்பார் சான் கிளார்க். (காசிராசன்,இரா., 2008)

தமிழ்க் காப்பிய மரபில் கடவுளர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெற்று காப்பியங்களின் கதை ஓட்டத்திற்குத் துணைபுரிகின்றன. சில காப்பியங்களில் கடவுளர்களே காப்பியத் தலைமைப் பாத்திரங்களாக அமைதல் உண்டு. அவ்வகையின கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய குறிப்பிடத்தக்கன. இவற்றைக் கடவுளர் பற்றிய புராண காவியங்கள் எனலாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியங்களில் இந்திரன், அனற்கடவுள், மதுராபதி தெய்வம் முதலிய தெய்வங்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. மணிமேகலைத் தெய்வம், கந்திற்பாவை, தீவதிலகை போன்ற சமண, பௌத்த தெய்வங்கள் காப்பியம் நெடுங்கிலும் இடம்பெற்று பெரும் பங்களிப்பாற்றுகின்றன. இப்பங்களிப்புகள் காப்பியத்தை மிகப் பெரும் தொன்மமாகவே உருவாக்கியுள்ளன எனலாம். சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் மணிமேகலையில் தெய்வக் கதாபாத்திரங்களின் பங்களிப்பு மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

இரட்டைக் காப்பியங்களில் தெய்வங்கள் பல்வேறு காரணங்களுக்காக இடம்பெறுகின்றன.1. பாத்திர அறிமுகத்திற்காக, 2. பாத்திரங்களின் தலைமைப் பண்புகளை எடுத்துரைக்க, 3. பாத்திரங்களின் ஆற்றலை வெளிப்படுத்த, 4.பாத்திரங்களை நெறிப்படுத்த, 5. பாத்திரங்களுக்கு உதவி புரிய என்ற நிலைகளில் அறியலாம். மேற்கூறிய காரணங்கள் பொதுவான ஒன்றே ஆகும். ஒரு சில தெய்வங்கள் மேற்கூறிய ஐந்துள்ளும் அடங்குவதையும் காணலாம். ஒரு சில ஒன்று, இரண்டு காரணங்களுக்குள் அடங்குகின்றன.

## பாத்திர அறிமுகத்திற்காக

இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையில் பல்வேறு முதன்மை, துணைக் கதாப்பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. அவைகளை அறிமுகம் செய்தல் காப்பிய ஆசிரியரின் கடமை. அவ்வகையில் மாதவி பற்றிய தொன்மக் குலமரபினை எடுத்துரைக்க விஞ்சை வீரனையும் (சிலப்பதிகாரம், கா.6), தேவந்திக்காகக் பாசண்டைச் சாத்தன் (சிலப்பதிகாரம்,கா.6,9), ஆபுத்திரனது திறமுரைக்க தீவதிலகை (மணிமேகலை,கா.11,25) என்றளவில் தெய்வங்கள் துணை புரிகின்றன. அத்தெய்வத்துள்ளும் தீவதிலகை என்ற தெய்வம் மணிமேகலைக்கு அமுதசுரபி கிடைக்கத் துணைபுரிகின்றது.மேலும் மணிமேகலைக்கு மணிபல்லவத் தீவினில் பலவகையில் துணைபுரிகின்றது.

## பாத்திரங்களின் தலைமைப் பண்புகளை எடுத்துரைக்க

தன்னேரில்லாத் தலைவனை உடைய காப்பியத்தில் அவனது தலைமைப் பண்புகளை எடுத்துரைக்கக் காப்பிய ஆசிரியன் பெரிதும் கவனம் கொள்கின்றான். பெண்பித்தன் என்ற குற்றச்சாட்டைக் கோவலன் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக இளங்கோ கையாளும் பாத்திரமே வனசாரிணி என்ற தெய்வம் ஆகும். சதுக்கப் பூதமும் கோவலனது தலைமைப் பண்புகளை எடுத்துரைக்கின்றது.

## வனசாரிணி

வனசாரிணி ஒரு கானுறை ஆரஞர் தெய்வம். மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலன் நீர் வேட்கையைத் தணிக்கத் தனியே செல்லுமிடத்து மாதவியின் தோழி வயந்த மாலை வடிவில் தோன்றுகின்றது. அது நடுங்கிக் கண்ணீர் விட்டுக் கோவலனின் கால்களில் விழுந்து வணங்கியது. தன் மீது இருந்த கோபத்தை நீக்கும் பொருட்டு மாதவி கோவனுக்கு ஒரு கடிதம் ஒன்றை எழுதி வயந்தமாலையிடம் கொடுத்து அனுப்பினாள். அதை அவன் வாங்காது திருப்பி அனுப்பிவிட்டான். அந்த நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தாள்.

கோவலன் இவ்வழிகளில் வனதெய்வங்கள் தோன்றி மயக்கும் வகையில் பேசித் துன்பம் தரும் என்று மாமறை முதல்வன் முன்னமே கூறியிருந்ததை நினைவு கூர்ந்தான். உடனே அவன் பாய்கலைப் பாவையின் மந்திரத்தை உச்சரித்தான். அதைக் கேட்ட அளவில் வயந்தமாலை வடிவில் வந்த வனசாரிணி தனது உண்மை நிலையை ஒத்துக் கொண்டது. இச்செய்தியைக் கவுந்தியடிகள், கண்ணகி ஆகியோரிடத்தில் கூற வேண்டாம் என வேண்டுகோள் விடுத்தது.

"வனசா ரிணியான் மயக்கஞ் செய்தேன்

புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்

என்றிற முரையா தேகென் றேகத்" (சிலப்பதிகாரம், கா.11 : 198-200)

(சோமசுந்தரனார், 2021)

இந்நிகழ்ச்சி மூலமாகக் கோவலனின் மனத்திண்மையை அறியலாம். கோவலன் பெண்பித்து மிக்கவன் அல்லன். தெளிவான முடிவு எடுத்தே மாதவியை விட்டு நீங்கினான், அவசரத்தால் அல்ல என்ற கோவலனின் கருத்துச் சிதைவின்மையை இதன் மூலம் சற்றுத் தெளிவுபடுத்துகின்றார்.

## பூதங்கள்

சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியங்களில் பூதங்கள் பல இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சிறப்புப் பொருந்தியன நாளங்காடிப் பூதம், சதுக்கப் பூதம் என்பனவாகும். சதுக்கப் பூதம் இவ்விரண்டு காப்பியங்களிலும் பாத்திரமாக இடம்பெற்றுள்ளது.

பொய்க்காரியாளனைச் சதுக்கப் பூதம் பிடித்து உண்ணத் துணிந்த போது அவனது முதிய தாயாரின் வருத்தம் கண்டு, அது தணிக்க விரும்பிய கோவலன், பூதத்திடம் சென்று தன் உயிரை எடுத்துக் கொண்டு 'பொய்யனை' விடுக என்றான். ஆனால் பூதமோ ஈங்கில்லை' எனக் கூறி அவனைப் புடைத்து விழுங்கி விடுகிறது. நரகன் உயிருக்கு நல்லுயிர் கொண்டு பரகதி இழக்கும் பண்பு அதைக் கண்டு கோவலன் மனம் வருந்தினான். பூதத்தால் கொல்லப்பட்டவனது தாய் மற்றும் அவனுடைய சுற்றத்தாரையும் உறவினர்களையும் தனது சுற்றம் போலக் கருதிக் காத்தான்.

நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு

பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை

ஒழிக நின் கருத்தென வுயிர்முன் புடைப்ப

அழிதரு முள்ளத் தவளொடும் போந்தவன்

சுற்றத் தோர்க்குந் தொடர்புறு கிளைகட்கும்

பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி யறுத்துப்

பல்லாண்டு புரந்த வில்லோர் செம்மல் (மேலது, கா.15 : 84-90) (சோமசுந்தரனார், 2021)

என்ற அடிகள் கோவலனின் நற்பண்பை, இரக்க உணர்வை, தியாக மனப்பான்மையை எடுத்துரைக்கிறது.மேலும் அவனது உயிரிரக்கப் பண்பைக் காட்டுவதோடு அவன் உயிர் நல்லுயிர் என்பதையும் எடுத்துரைக்கிறது.

## பாத்திரங்களின் ஆற்றலை வெளிப்படுத்த

கண்ணகியின் கற்பாற்றலை, தெய்வத் தன்மையை சில தெய்வங்கள் வாயிலாக உயர்நிலைப்படுத்திக் கூறுகின்றார் இளங்கோவடிகள். காய்கதிர்ச்செல்வன் (மேலது,கா.18 : 52,53), தீக்கடவுள் (மேலது, கா.21: 50,52), மதுராபதி தெய்வம் (மேலது, கா.23: 171-172) முதலிய கண்ணகியின் தெய்வீக ஆற்றலைப் புலப்படுத்துகின்றது. காய்கதிர்ச் செல்வன் ஒலி வடிவமாக இடம்பெறுகின்றான்.

## பாத்திரங்கள் நெறிப்படுத்த

காப்பியக் கதை மாந்தர்களை நெறிப்படுத்துவதற்காகச் சில கதை மாந்தர்களை அமைப்பது உண்டு. அவ்வகையில் மணிமேகலைக் காப்பியத்தில் கந்திற்பாவை என்ற தெய்வப் பாத்திரம் இடம்பெறுகின்றது. ஓரிடத்திலேயே இருந்துகொண்டு இப்பாத்திரம் மணிமேகலையை நல்வழிப்படுத்தியது(மணிமேகலை கா.21:129-133). சுதமதியின் முற்பிறப்பு உணர்த்தியமை (மேலது,கா.07). மேலும் அக்கந்திற்பாவையே காஞ்சனுக்கு, அவன் மனைவி காயசண்டிகையின் இறப்பை அறிவிக்கின்றது. அதோடு காயசண்டிகை வடிவில் இருப்பவள் மணிமேகலையே என்பதையும் அறிவுறுத்துகின்றது (மேலது,கா.20). காஞ்சனைால் கொலையுண்ட உதய குமாரனைத் தழுவ மணிமேகலை முற்பட்ட போது கந்திற்பாவை தடுத்தது. மேலும் அவளுக்கு தவவாழ்வு மேற்கொண்டோர் உலகியல் உணர்ச்சிக்கு அன்பிற்கு அடிமையாகக் கூடாது என்று அறவுரை கூறியது. (மேலது, கா.21: 27-190). (சோமசுந்தரனார், 2022)

மணிமேகலைக்கும் சுதமதிக்கும் நல்ல அறவுரைகளையும், ஊழின் தன்மையையும் உரைத்து நல்வழிப்படுத்துகின்றது. காப்பியத் தலைவியின் செயலுக்குப் பெரிதும் ஊக்கம் கொடுக்கும் வகையில் காந்திற்பாவையின் பங்களிப்பு காப்பியம் நெடுங்கிலும் அமைந்துள்ளதை அறிலாம்.

## பாத்திரங்களுக்கு உதவி புரிய

தலைமைக் கதை மாந்தரை அடியொற்றிய காப்பியக் கதை ஓட்டத்திற்கு துணைமைக் கதாபாத்திரங்களின் பங்களிப்பு அவசியமே ஆகும். மணிமேகலைக் காப்பியத்தில் மணிமேகலா தெய்வம் பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றேயாகும். அதே போல் காஞ்சனனையும் காயசண்டிகையையும் குறிப்பிடலாம். மணிமேகலைக்குப் பெரிதும் உதவி புரியும் தெய்வப் பாத்திரங்களாக இவைகள் அமைகின்றன.

## மணிமேகலா தெய்வம்

மணிமேகலா தெய்வம் கோவலன் முன்னோன் ஒருவன் கடலில் தத்தளித்த போது உயிர்காத்து உதவியது. அவ்வுதவியை மனத்தில் கொண்டு கோவலன் தன் மகளுக்கு மணிமேகலை என்று பெயரிட்டான் (சிலப்பதிகாரம், கா.15: 28-37). (சோமசுந்தரனார், 2022)

மணிமேகலைக் காப்பியத்தில் இத்தெய்வம் தனி கதாப்பாத்திரமாகவே இடம்பெறுகின்றது. மணிமேகலா தெய்வம், ஒரு பெண் வடிவில் மணிமேகலை, சுதமதிக்கு சக்கரவாளக் கோட்டத்தின் இயல்புரைத்து (மணிமேகலை,கா.6:17-205), மணிமேகலையை உதயகுமாரனிடமிருந்து மீட்டு மணிப்பல்லவத் தீவில் சேர்ப்பிக்கின்றது. மணிமேகலை தன் முற்பிறப்பை உணர்ந்து கொள்ள வழிவகை செய்கின்றது. (மேலது கா.7) மணிமேகலைத் தெய்வம் மணிமேகலைக்கு வேற்று வடிவம் கொள்ளவும், வானில் பறக்கவும் மந்திரங்களை வழங்கியது. (மேலது கா. 10 : 80-81) (சோமசுந்தரனார், 2022)

மணிமேகலா தெய்வத்தின் பங்களிப்பு காப்பியத்தின் ஓட்டத்திற்கு உயிர்ப்பை வழங்குகின்றது. மணிமேகலையை மணிபல்லவத் தீவிற்குக் கொண்டு செல்லும் பொறுப்பை மணிமேகலா தெய்வம் ஏற்றுக் கொண்டதன் மூலமும் சில மந்திரங்களைக் கற்றுக் கொடுத்ததன் மூலமும் காப்பியம் இடையீடு இன்றி நகர்வதற்கு உதவும் பாத்திரமாக இப்பாத்திரம் அமைந்துள்ளது.

## காஞ்சனனும் காயசண்டிகையும்

மணிமேகலைக் காப்பியத்தில் காஞ்சனன், காயசண்டிகை என்ற இரண்டு பாத்திரங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதொன்றாகும். அமுதசுரபியின் பெருமை காயசண்டிகை மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. உதயகுமரனுக்குத் தகுந்த முடிவை காஞ்சனன் வழங்குகின்றான். காப்பியக் கதையின் முக்கியத் தருணங்களில் இவர்களின் பங்களிப்பு தனித்துவம் மிக்க ஒன்றாகும். (மேலது கா.17) (சோமசுந்தரனார், 2022)

## முடிவுரை

சிலப்பதிகாரம், மணிமேகலையில் தெய்வங்களின் பங்களிப்பும், தேவர்களின் இடையீடும் சிறப்புற அமைகின்றது. சிலம்பில் இக்கடவுளர்களின் ஈடுபாட்டை நீக்கினாலும் சிலம்பின் சிறப்பு, உணர்ச்சிப் போக்கு, இலக்கியச் சுவை எவ்விதத்திலும் பாதிப்பு அடைவதில்லை. ஆயினும் மணிமேகலையில் கடவுளர் இல்லை என்றால் காப்பிய இயக்கமே இல்லை என்னும் அளவிற்கு அவற்றின் இடையீடு மிகுதி. அவை காப்பியத்தில் மணிமேகலைப் பாத்திரத்துடன் இணைந்து அவளது தவ வாழ்க்கையை, சமயப் பணியைச் சிறப்புற அமைக்க உதவி செய்கின்றன.

## References


Kasirasan, I., (2008) Origin and Development of Poetry, Madhi Publishing House, Madurai.

Somasundaranar, (2021) Silappadhikaram, Tirunelveli South Indian Saiva Siddhanta Book Publishing Corporation Limited, Chennai.

Somasundaranar, (2022) Manimekalai, Tirunelveli South Indian Saiva Siddhanta Book Publishing Corporation Limited, Chennai.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2020. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License